# அன்பரின் ஊழியம்
## ANBARIN OOZHIYAM

மலர்:9 இதழ்:7 ஜூலை 2023 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-

VOL: 9 ISSUE NO: 7 July 2023 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-






# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்! தேவ நாமம் மகிமைக்காக!

அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார்.
(ஏசாயா 25:8)

## மரித்துப்போன தாயை உயிரோடு எழுப்பினவர் நம் இயேசுகிறிஸ்து!

என் பெயர் செல்வி. 2022-ம் வருடம் ஜூன் மாதம் 1-ம் தேதி இரவு 12 மணியளவில் என் அம்மா மயக்க நிலையில் இருந்தார்கள். சிறிது நேரத்தில் உடலில் எந்த அசைவும் இல்லை. உடம்பெல்லாம் ஐஸ்கட்டி மாதிரி ஜில்லென்று ஆகிவிட்டது. கண் மேலே சொருகி விட்டது. என் அம்மா இறந்து விட்டார்கள். என்ன செய்வது என தெரியாமல் கர்த்தரை நோக்கி கூப்பிட்டேன்.

**உடனே அன்பரின் ஊழியம் தான் ஞாபகத்திற்கு வந்தது. அன்பரின் ஊழியத்திற்கு போன் செய்தேன். அந்த நேரத்தில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் போனில் ஜெபித்தார்கள். உலர்ந்த எலும்புகள் உயிர் பெறட்டும் என ஒரு வார்த்தை தான் சொன்னார்கள். என் அம்மாவின் உடலில் அசைவு ஏற்பட்டது. ஜில்லென்று இருந்த உடலில் சூடு ஏற்பட்டது.**



செல்வியின் பெற்றோர்

**அதன்பின் ஐயா சொன்னார்கள், உலர்ந்த எலும பாக இருக்கிற அவர்களுக்குள் கர்த்தருடைய ஜீவன் இறங்கப்போகிறது என என்னிடம் சொன்னார்கள். உடனே என் அம்மாவின் கண் அசைய ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் படுக்கை யிலிருந்து என் அம்மா எழுந்து உட்கார்ந்தார்கள்.**

**என் அம்மா என்னிடம் சொன்னது, நான் மரித்துப் போய் விட்டேன். திடீரென தேவனுடைய வல்லமை எனக்குள் வந்தது. இப்போது எழுந்து விட்டேன் என சொன்னார்கள்.**

என் அம்மாவிற்கு அற்புதமாய் ஜீவனைக் கொடுத்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். அந்த இரவு நேரத்திலும் என் அம்மாவிற்காக பாரத்தோடு ஜெபித்த சகோதரர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை அன்போடு தெரிவிக்கிறேன்.



என் அப்பாவை ஒரு விஷப்பூச்சி கடித்து விட்டது. அதனால் கால் வீங்கி கறுத்துப்போய் இருந்தது. **அதற்காகவும் அன்பரின் ஊழியத்திற்கு போன் மூலம் தொடர்புக்கொண்டு ஜெபிக்கும்படி சொன்னேன். ஒரு ஊழியர் ஜெபித்தார்கள். கர்த்தர் என் அப்பாவிற்கும் நல்ல சுகத்தைத் தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்**

**- சகோதரி. செல்வி, வேலூர்**




# அன்பரின் ஊழியம்

மலர்:9 ◆ ஜுலை 2023 ◆ இதழ் 7


## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அருமையான பங்காளர்களுக்கும், அன்பு சகோதர, சகோதரிகளுக்கும் இயேசு கிறிஸ்துவின் உன்னத நாமத்தில் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுக்காக தொடர்ந்து ஜெபித்தும், உற்சாகமாய் ஊழியத்தை தாங்கியும் வருகிற உங்களுக்கு கர்த்தர் சகலவித நன்மைகளையும் நிறைவாக தந்து ஆசீர்வதிப்பாராக!

**... என் அடையாளங்களையும் அற்புதங்களையும் மிகுதியாய் நடப்பிப்பேன். யாத்தி.7:3** இந்த வேத வசனத்தின்படியே இந்த மாதம் கர்த்தர் தாமே உங்கள் வாழ்வில் அடையாளங்களையும், அற்புதங்களையும் மிகுதியாய் நடப்பிக்கும்படி வாழ்த்தி ஜெபிக்கிறேன். சில நேரங்களில் சத்துருக்கள் மகிமையாக, கொடூரமாக உங்களை எதிர்த்து வந்தால் பயப்படவேண்டாம், சோர்ந்து போகவும் வேண்டாம். ஏனென்றால் சத்துருவின் மும்முரத்தை அடக்கி, கர்த்தர் தம் பலத்த கரத்தினால் உங்களை விடுதலையாக்குவார். உங்களுக்கு முன் இருக்கிற எகிப்தியர்களை கண் காணாதபடி செய்து உங்களை அவர்களுடைய கைக்கு தப்புவிப்பார், விடுவிப்பார். அற்புத அடையாளங்களை காணும்படி செய்வார்.

கடந்த ஜுன் மாதம் நடைபெற்ற அனைத்து கூட்டங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். **ஜுலை மாதம் திருநெல்வேலி, தூத்துக்குடி, ராஜமன்றி, விஜயவாடா, திருச்சியில் நடைபெறயிருக்கிற அனைத்து கூட்டங்களுக்காகவும் ஜெபியுங்கள். கூட்டங்களில் பங்கு பெறுகிற பங்காளர்கள் வாழ்வில் கர்த்தர் ஏராளமான நன்மைகளை செய்து வருகிறார். கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற உங்கள் குடும்பத்தின் சார்பாக ஸ்பான்சர் செய்து ஊழியத்தை தாங்குங்கள். கர்த்தர் நிச்சயமாக அதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தருவார்.**

ஜுன் மாதத்திலிருந்து அன்பரின் ஊழிய ஜெப ஸ்தல கட்டிடத்தின் பராமரிப்பு பணிகள், பெயிண்டிங் வேலைகள் நடைபெற்று வருகிறது.


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |



24 மணி நேர ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 94888 45627
காலை 9.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்: 80987 42638
**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205
e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**
முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

இந்த பணிக்கு பல இலட்சங்கள் தேவைப் படுகிறது. இதற்காக ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுகிறபடி காணிக்கை அனுப்பி இந்த பணிக்கு உதவி செய்யுங்கள்.

பத்திரிக்கையின் 13-ஆம் பக்கத்தில் அன்பரின் ஊழிய வேலைவாய்ப்பு தகவல்களை நீங்கள் பார்த்து ஊழியத்தில் வாஞ்சையுள்ள பிள்ளைகளை ஊழியத்திற்கு அனுப்பி வையுங்கள்.

Ministry of Jesus you tube சேனல் வாயிலாக தினந்தோறும் அதிகாலை 5.00 மணிக்கு வருகிற அனுதின அற்புதம் நிகழ்ச்சியை பாருங்கள். அந்த நிகழ்ச்சிகள் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும். ஆகவே தவறாமல் பாருங்கள். உங்கள் நண்பர்களுக்கும் share செய்யுங்கள்.

எங்கள் அப்பா, அம்மாவின் நல்ல சுகத்திற்காகவும், கர்த்தரே அவர்களுக்கு பெலனாக இருக்கவும், எங்கள் அனைவருக் காகவும், ஊழியத்திற்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

எங்களை தனியே சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக் கொண்டு முன் அனுமதி பெற்று வாருங்கள். தொலைபேசி எண்: **94888 45627**

**இம்மாத வாக்குத்தத்த வசனங்கள்**

**1 சாமுவேல் 2:8**
**ஏசாயா 27:6**
**சங்கீதம் 66:14**
**நீதிமொழிகள் 11:8**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**




**Telugu Whats App No: 91770 87860**

**Tamil Whats App No: 95004 87059**



# என் பாத்திரம் நிரம்பி வழிகிறது

**சங்கீதம் 23:5**

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

கிறிஸ்து இயேசுவுக்குள் எனக்கன்பான தேவ பிள்ளைகளே!

அதிசீக்கிரமாய் வரப்போகிற ராஜாதி ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எனது இனிய வாழ்த்துக்கள்!

- **இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக. (ரூத் 2:12)**
- **நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்ப தனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். (யோவான் 15:8)**

ஆரம்பத்தில் நீங்கள் கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொள்ளும்பொழுது உங்களுக்கு உண்டாயிருந்த சந்தோஷம், சமாதானம், அவர் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பு எப்போதும் அதிகரித்துக்கொண்டே இருப்பதாக

உங்கள் ஜெபங்கள் மற்றும் உதவிகள் மூலம் அன்பரின் ஊழியமானது நாடோறும் வளர்ந்து கொண்டே வருகிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! உங்கள் ஆசீர்வாதத்தின் எல்லையை கர்த்தர் தாமே பெரிதாக்கி, நீங்களும் உங்கள் மூலம் சந்திக்கப் படுகின்ற அனைவரும் ஆசீர்வதிக்கப்படும்படி என் அனுதின ஜெப மன்றாட்டுகளில் உங்களுக்காக ஜெபம் செய்கிறேன். இந்த மாதம் முழுவதும் கர்த்தருடைய பலத்த கரம் உங்களோடுகூட இருந்து உங்களை ஆசீர்வதித்து எல்லா தீமைக்கும் உங்களை விலக்கி காத்துக்கொள்ளும்.

அன்பான தேவ ஜனமே! பல சமயங்களில் நான் இரவு முழுவதும் கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருப்பேன். நான் தூங்குவது மிக மிக சொற்ப நேரமே. உங்களுக்காக கண்ணீரோடு ஜெபிக்கவே தேவன் என்னை அழைத்தார்.

இந்த மாதம் தேவன் எனக்கு அருளிய செய்தி, **என் பாத்திரம் நிரம்பி வழிகிறது சங்கீதம் 23:5-ஐ** மையமாக வைத்து உங்களுக்கு எழுதுகிறேன். நமது அன்றாட வாழ்க்கையிலும் நாம் பலவிதமான பாத்திரங்களை பயன்படுத்துகி றோம். ஒரு சிலர் மண்பானைகள், மண்குடங் கள், சில்வர் பாத்திரங்கள், பித்தளை பாத்திரங் கள், பீங்கான் பாத்திரங்களை பயன்படுத்து கின்றனர். வசதி படைத்தவர்கள் தங்க பாத்திரங் கள், தங்க குடங்கள், தங்க கிண்ணங்கள், தங்க ஜாடிகள் மற்றும் வெள்ளி என பலவகை பாத்திரங்களை பயன்படுத்துகிறார்கள்.

வேதத்தில் பாத்திரங்கள் என்னும் வார்த்தைக்கு அதிகமான ஆழ்ந்த அர்த்தங்கள் இருப்பதை அறியலாம். மனுஷனுடைய வாழ்க்கையை பாத்திரமாக ஒப்பிட்டு வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அவற்றைக்குறித்து உங்களுக்கு விளக்கமாக எழுதுகிறேன். **ஐயோ! தங்கத்துக்கொப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர் குயவனுடைய கைவேலை யான மண்பாண்டங்களாய் எண்ணப்படு கிறார்களே. (புலம்பல் 4:2) (எரேமியா 18:1-6)**

## 1. இரட்சிப்பின் ஊற்றுகள் அண்டே தண்ணீர் மொண்டு கொள்ளும் பாத்திரங்கள்!

**நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டு கொள்வீர்கள். ஏசாயா 12:3**

நம்முடைய தேவனாகிய கர்த்தரே நமக்கு இரட்சிப்பாய் இருக்கிறார். ஆகையால் நாம் பயப்பட தேவையில்லை. நமது அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தால் நாம் இரட்சிக்கப்பட்டோம். இது அவருடைய சுத்த கிருபை. **(ரோமர் 10:10; எபேசியர் 2:8)** இன்றைக்கு அநேக குடும்பங்களில் ஒரு சிலர் மாத்திரம் இரட்சிக்கப் பட்டு இருக்கிறார்கள். மற்றவர்கள் இந்த பாவம் நிறைந்த உலக வாழ்வில், பாவ அழுக்கு நிறைந்த தண்ணீரை பருகுகிறார்கள். எப்படியென்றால் பலவிதமான மண்ணாசை, உலக ஆசா பாசங்கள் மற்றும் பலவிதமான பாவங்கள் நிறைந்த ஊற்றினிடத்தில் சென்று தங்கள் வாழ்க்கைக்கு தேவையில்லாத தண்ணீரை அனுதினமும் பருகுகிறார்கள்.

ஒரு காலத்தில் கிறிஸ்துவை அறியாத நம்மில் அநேகர் இப்படித்தான் இருந்தோம். **ஆனால் கிறிஸ்து இயேசு இந்த அழுக்கு நிறைந்த மட்பாத்திரங்களை தூக்கி எறிந்து விட்டு அவருடைய இரட்சிப்பை பெற்ற பொற்பாத்திரங்களாய் நம்மை மாற்றினார்.** நம்மை மாத்திரமல்ல நம் மூலமாய் குடும்பத்தில் இருக்கிற அனைவரும் இரட்சிக்கப்பட அவர் கிருபை செய்கிறார். **இரட்சிக்கப்பட்ட ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டா கிறது. (லூக்கா 15:10; அப்போஸ்.16:31-34) இப்படிப்பட்ட இரட்சிப்பை பெற்றவர்கள் மகிழ்ச்சி யோடும், கபடமில்லாத இருதயத்தோடும் வாழ்ந்து அனுதினமும் தேவனை துதித்து கர்த்தருடைய கிருபை யையும், மனுஷருடைய தயையும் பெற்றுக் கொள்கிறார்கள். (அப்போஸ். 2:41-47)**

இன்று அநேக குடும்பங்களில் கணவன்மார் மற்றும் பிள்ளைகள் குடித்து மனம் போன போக்கில் வாழ்கிறார்கள். இதனால் இல்லத் தரசிகளே அதிக வேதனைப்படு கிறார்கள். சமீபத்தில் ஒரு தாய் **"ஐயா! என் கணவர் குடும்ப ஜெபம் செய்வார், ஆலயத் திற்கு தவறாமல் செல்வார். வேலை முடிந்து வீட்டிற்கு வந்தவுடன் டி.வி.யை சத்தமாக வைத்து, சினிமா மற்றும் பல வேண்டாத நிகழ்ச்சிகளை தவறாமல் பார்த்து விட்டு தான் தூங்குவார். நானும் என் மூன்று பிள்ளைகளும் வேறு அறையில் ஒதுங்கி அந்த டி.வி. சத்தங்கள் எங்களுக்கு கேட்காதபடி கண்ணீ ரோடு அவருடைய உண்மையான மனமாற்றத் திற்காக இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்"** என்று கூறினாள்.

அன்பு பிள்ளைகளே, பாருங்கள் ஆலயத் திற்கு தவறாமல் செல்லும் ஒரு கிறிஸ்தவனே பலவித பாவ அசுத்தங்களை கொண்டிருக்கிறார். இது ஒரு மாய்மாலமான வாழ்க்கை அல்லவா? அந்த சகோதரி கண்ணீரோடு ஜெபித்தபொழுது கர்த்தர் கேட்டு அவள் கணவரை இரட்சித்தார். மிகுந்த சந்தோஷம், அமைதி அந்த வீட்டில் பிறந்தது.

## 2. குறைவுகளை நிறைவாக்கும் பாத்திரம்!

**அப்பொழுது அவன்: நீ போய், உன்னுடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத் திலும் அநேகம் வெறும்பாத்திரங்களைக் கேட்டு வாங்கி,**

**உள்ளே போய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப் பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான். (2இராஜாக்கள் 4:3-4)**

**2 இராஜா. 4:1 முதல் 7** இதில் வரும் ஏழை விதவையின் கதை உங்கள் அனைவருக்கும் தெரியும். கணவரை இழந்து வாழ்ந்த அந்த விதவை தாய் கடன் பிரச்சனையால் வேதனைப் படுகிறாள். கடனை செலுத்த முடியாத சூழலில் கடன் கொடுத்தவன் அவளுடைய இரண்டு பிள்ளை களையும் அடிமைகளாக எடுத்துச் செல்ல வந்திருந்தான். அந்த சமயத்தில்தான் அவள் எலிசா தீர்க்கதரிசியினிடத்தில் ஓடினாள். இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் நான் ஜெபித்தால் ஆண்டவர் கேட்கமாட்டாரா? என்றும், ஒரு சிலர் **"எனக்கு யாரும் பிரசங்கிக்க தேவையில்லை, ஜெபிக்க தேவை யில்லை"** என்று தங்களை தாங்களே பெருமைப் பட்டு கொண்டும் வாழ்கிறார்கள். வேறு சிலர் தங்கள் குறைகளை தீர்க்க மனிதரை நம்பி

கஷ்டத்தின்மேல் கஷ்டம் அனுபவிக்கிறார்கள். ஆனால் இந்த விதவை தாயோ கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலிசாவை தேடினாள்.

இக்கட்டான நேரத்தில் அவள் எலிசாவை நாடினபொழுது எலிசா **"உன்னிடத்தில் என்ன இருக்கிறது"** என்று கேட்டார். **அப்பொழுது அவள் "ஒரு குடம் எண்ணெய் மாத்திரம் இருக்கிறது"** என்றாள். அப்பொழுது தீர்க்க தரிசியாகிய எலிசா, **"நீ போய், உன்னுடைய அயல் வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கி, உள்ளே போய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப் பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் எண்ணெய் வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை. அதன் பின் பாத்திரங்களில் உள்ள எண்ணெயை விற்று உன் கடனை அடைத்து, மீதமுள்ள எண்ணெயை வைத்து நீயும், உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள்"** என்றார். அப்படியே நடந்ததை நாம் வேதத்தில் பார்க்கிறோம்.

இதைப்போலவே **யோவான் 2:1-11** வசனங்களில், கானாவூரில் நடந்த திருமணத்தில் திராட்ச ரசம் குறைவுபட்ட போது இயேசுவின் தாயாகிய மரியாள் தனது சுய புத்தியை சாராமல், அந்த திருமணத்தை ஒழுங்கு செய்த மற்றவர்களையும் நாடாமல், இயேசுவிடம் சென்று திராட்சரசம் இல்லை என சொன்னாள். அதன்பின் மரியாள் வேலைக்காரரை நோக்கி, அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள். என்றாள். பாருங்கள் அற்பமாக எண்ணப்பட்ட கால் கழுவும் தண்ணீர் திராட்சரசமாய் மாறியதை பார்க்கிறோம். எத்தனை பெரிய அதிசயம்! திருமணவிருந்தில் ஆறு கற்சாடிகள் இருந்தன. ஒவ்வொரு கற்சாடியிலும் 80 முதல் 100 லிட்டர் தண்ணீர் இருக்கும். அப்படியானால் 600 லிட்டர் தண்ணீர் நல்ல ருசியான திராட்சரசமாய் மாறினது. இதை வெளியே வாங்கினால் எவ்வளவு அதிகமான பணம் தேவை. ஆனால் இயேசுவை நாடினபொழுது, அவர் ஒரு நொடிப்பொழுதில் சாதாரண தண்ணீரை திராட்சரசமாய் மாற்றி குறைவை நிறைவாக்கினார்.

ஆம். கர்த்தருடைய சமூகத்தை நித்தமும் தேடி அவரோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருப்பவர்களுக்கு கர்த்தர் தம்முடைய நாமத்தின் நிமித்தம் பெரிய அற்புதங்களை செய்ய ஆயத்த மாய் இருக்கிறார். ஆவிக்குரிய பிரகாரமாக இந்த சம்பவத்தை நாம் எடுத்துக்கொள்வோம் என்றால், எண்ணெய் என்பது அபிஷேகம். நாம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும்பொழுது கர்த்தருடைய அபிஷேகத்தை பெற்றுக் கொள்கிறோம், அபிஷேகத் திற்காய் இடைவிடாமல் ஜெபிக்கும்போதும் பெற்றுக் கொள்கிறோம்.

நம் மேல்! ஊற்றப்பட்ட பரிசுத்த ஆவியானவருடைய நதி நம்மில் பெருக வேண்டும் என்றால் தினந்தோறும் தேவ சமூகத்தில் அதிக நேரம் செலவிட வேண்டும். அவருடைய பரிசுத்த வேதாகமத்தை அதிகமாய் படித்து, கர்த்தரை பாடி துதித்து, ஜெபித்து அவரோடு ஐக்கியப்பட வேண்டும். குடும்ப பொறுப்புகள், பல கவலைகள், அவசியமான வேலைகள் இருக்கிறது என நினைத்து ஜெபத்தை விடக்கூடாது. மனமிருந்தால் இடம் உண்டு.

நான் ஒவ்வொரு நாளும் குறைந்தது 6 மணி நேரம் தேவசமூகத்தில் இருந்தேனா என்று என்னை நானே பரிசோதனை செய்வேன். அப்படி பகலில் நேரம் கிடைக்காவிட்டால் இரவு முழுவதும் தேவ சமூகத்தில் காத்திருப்பேன். எனவேதான் அபிஷேகத்தால் நிரப்பப்பட்டு நான் மக்களுக்கு ஆறுதலாக சொல்லும் வார்த்தைகள் அற்புதங் களாக மாறுகிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! **நாம் எப்பொழுதும் அபிஷேகத்தில் நிரம்பி வாழ்வோமாக!** நம்மில் மாத்திரமல்ல நம் மூலமாக மற்றவர்களுக்கும் அது பயன்பட வேண்டும்.

ஆம், நாமும் கர்த்தரையும் அவருடைய தீர்க்கதரிசியையும் நாடித்தேடும் பொழுது அவர் நம் குறைகளை அற்புதமாய் நீக்கி, நிச்சயமாய் நிறைவாக்குவார். **உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள். அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்தி பெறுவீர்கள் என்றான். 2நாளா.20:20.**

## 3. வல்லமையான அபிஷேக பாத்திரங்கள்!

(i) இராஜாங்க அபிஷேகம்!
(ii) நன்றி படைப்பின் விலையுயர்ந்த தைல புட்டிகள்!
(iii) கர்த்தருடைய வருகைக்காக அபிஷேக எண்ணெயால் நிரப்பப்பட்ட பாத்திரங்கள்!
(iv) துயரத்தை ஆனந்த தைலமாய் மாற்றும் அபிஷேக பாத்திரங்கள்!

### (i) இராஜாங்க அபிஷேகம்!

**அப்பொழுது சாமுவேல்: தைலக் கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான். அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார். 1சாமுவேல் 16:13**

சாமுவேல் என்னும் மாபெரும் தீர்க்கதரிசி மூலம் கர்த்தர் தாவீதை அபிஷேகித்தார். அந்த அபிஷேகம் அவனுக்குள் நிறைந்திருந்தது. அந்த அபிஷேகத்தின் வல்லமையால் அவனை எதிர்த்து வந்த சிங்கத்தையும், கரடியையும் கொன்று போட்டான். இராட்சஷனான கோலியாத்தை வீழ்த்தினான். **(1 சாமுவேல் 16:13; 17:34)** எண்ணில் அடங்காத சத்துருக்கள் அவனை சூழ்ந்திருந்தாலும் தாவீதிற்குள் இருந்த அபிஷேகத்தின் வல்லமையால் அவர்களால் அவனை ஜெயிக்க முடியவில்லை. **(சங்கீதம் 118:12)** பொறாமையின் நிமித்தம் சவுல் தாவீதை கொலை செய்ய அநேகரை அனுப்பினாலும் அவன் முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்தன. காரணம் **வெளிபடுத்தல் 1:6; 5:10**-ன்படி ராஜரீக அபிஷேகம் அவனுக்குள் இருந்தது. எனவே சத்துருக்கள் அவனை மேற்கொள்ள முடியவில்லை. முடிவில் அவனே மிகப்பெரிய அரசனாக மாறினான். **உங்கள் வாழ்வில் வருகிற சத்துருக்களை நீங்கள் ஜெயித்து, ராஜாங்க அபிஷேகத்தால் எப்பொழுதும் நிறைந்து, எல்லா வற்றிலும் ஆசீர்வாதமாயிருந்து வல்லமையின் பாத்திரமாக திகழ உங்களுக்கு கர்த்தர் உதவி செய்வார். ஆகவே கலங்காதீர்கள்.**

**சிம்சோன் மீது அபிஷேகம் காணப்பட்டது. அந்த அபிஷேகத்தால் அவன் கர்ஜிக்கிற பால சிங்கத்தை ஒரு ஆட்டு குட்டியை கிழித்து போடுவது போல கிழித்துப் போட்டான். (நியாயா.14:6) தன் கரங்களில் எந்தவிதமான ஈட்டியோ, கேடகமோ, பட்டயமோ இல்லாத நிலையில் ஒரு கழுதையின் தாடை எலும்பை பயன்படுத்தி சத்துருக்கள் ஆயிரம் பேரை கொன்று போட்டான். (நியாயா.15:15)**

எந்த மனுஷனாலும் ஜெயிக்க முடியாத மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசை இயேசு கிறிஸ்து தாமே அவருக்குள்ளிருந்த உயிர்த்தெழுந்த ஆவியானவரால் ஜெயித்தார். எப்பேர்பட்ட பெரிய மருத்துவர்களும், விஞ்ஞானிகளும், பல நாடுகளை ஜெயித்த பேரரசர்களும், பெரிய நாட்டின் தலைவர் களும் கூட ஜெயிக்க முடியாத சத்துருவாகிய சாத்தானின் கடைசி ஆயுதமாகிய மரணத்தை தம்முடைய மரணத்தால் கொன்று உயிர்த்தெழுதலின் வல்லமையை இயேசுகிறிஸ்து பெற்றார். **கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். (1பேதுரு 3:18).**

ஆம். **எனக்கன்பான தேவ பிள்ளைகளே! உங்களுடைய அன்றாட பணிகளில், வேலை ஸ்தலத்தில், நீங்கள் வாழும் இடங்களில் அல்லது உங்கள் குடும்பத்திற்குள்ளேயே பலவிதமான சத்துருக்கள் காரணமின்றி உங்களுக்கு எதிராக இருந்தாலும் கர்த்தர் உங்களை உயர்த்துவார். கர்த்தருடைய நன்மையும், கிருபையும் நிறைந்த பாத்திரங்களாய் உங்களை மாற்றுவார். மனங் கலங்காதீர்கள்! கர்த்தருடைய அபிஷேகத்தை பெற்றவர்கள் நிறைவு பெற்றவர்கள். அவர்கள் எங்கு போனாலும் பிசாசுகள் ஓடும். அற்புதங்கள் நடைபெறும், தேவ நாமம் மகிமைப்படும்!**

### (ii) நன்றி படைப்பின் விலையுயர்ந்த தைல புட்டிகள்!

**...மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள். அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. (யோவான் 12: 1-3)**

இயேசு மரித்த லாசருவை எழுப்பின பிறகு மரியாள் தன் நன்றி படைப்பாக சுமார் 40 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தைலத்தை கொண்டு வந்து அவருடைய பாதங்களில் ஊற்றுகிறாள். கர்த்தர் செய்த மிகப்பெரிய அற்புதத்திற்கு அவள் செய்த நன்றி கடனை நாம் இங்கே பார்க்கிறோம். அந்த தைலத்தின் வாசனை அறை முழுவதையும் நிரப்பினது. நம்மில் அநேகர் அற்புதங்களை பெறும் வரைக்கும் தேவனை தேடுவார்கள். அந்த நேரம் ஊழியத்திற்கு ஏதாவது கொடுத்துவிட்டு, பிறகு தேவனை மறந்துவிடுகிறார்கள். ஆனால் இந்த எளிமையான மார்த்தாள், மரியாள், லாசரு என்பவர்களுடைய பாசத்தையும், அன்பினையும் பாருங்கள். நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

நாம் எப்போதும் தேவனுக்கு மகிமையான தைலத்தை கொடுக்கின்ற பாத்திரங்களாய் காணப்பட வேண்டும். அவருக்கு கொடுப்பது, அவருடைய ஊழியத்தை தாங்குவது என்பது கட்டாயமல்ல, திரும்ப பத்து மடங்கு பிரதிபலன் கிடைக்கும் என்பதும் அல்ல. **அவர் மீது வைக்கும் ஒப்பற்ற அன்பால் அவருக்கு கொடுக்கிறோம்.** அவருடைய ஊழியங்களை தாங்குகிறோம். கணக்கு பார்க்காமல் நிறைவாக அவருக்கு கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கும்பொழுது நம்முடைய அன்பை வெளிப்படுத்துகிறோம். இன்றைக்கு உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். கர்த்தர் உங்களுக்கு செய்த ஏராளமான நன்மைகளை நினைத்து, நீங்கள் என்ன பதில் அவருக்கு செய்திருக்கிறீர்கள். அவருக்கு நன்றியாக இருக்கிறீர்களா? ஊழியத்தை தாங்குகிறீர்களா என யோசித்துப்பாருங்கள். ஊழியங்களை குறை சொல்வதை விட்டுவிட்டு, எல்லா ஊழியங்களையும் கட்டி எழுப்புவோம். கர்த்தருடைய ராஜ்யம் எங்கும் பரவட்டும். **(சங்கீதம் 116:12-14; 66:14)**

### (iii) கர்த்தருடைய வருகைக்காக அபிஷேக எண்ணெயால் நிரப்பப்பட்ட பாத்திரங்கள்! (மத்தேயு 25:1–13)

**புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். மத்.25:4**

நாம் அனைவரும் நன்றாக அறிந்தபடி கர்த்தருடைய இரகசிய வருகை வெகு சமீபம். ஒவ்வொரு நாளும் உலகில் நடக்கின்ற காரியங்களை பார்த்தே நாம் அறியலாம். அன்புள்ள தேவனும் நம் மேல் வைத்திருக்கிற அன்பின் நிமித்தம் நம்மை ஆயத்தப்படுத்துகிறார், எந்த நேரத்திலும் நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று நமக்கு அறிவுரை வழங்குகிறார். பத்து கன்னிகைகள் சம்பவத்தில் ஐந்து கன்னிகைகள் தங்களுடைய தீவட்டிகளுக்கு தேவையான எண்ணெயை பாத்திரங்களில் கொண்டு சென்றார்கள். மணவாளன் வர தாமதித்த பொழுது அவர்கள் நித்திரை அடைந்தார்கள். அதாவது ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு நிர்விசாரம், அசட்டுத்தனம், மணவாளன் வரும் பொழுது பார்த்துக்கொள்ளலாம் என்கிற சுய நம்பிக்கை. இப்படித்தான் இன்று அநேகர் இருக்கிறார்கள். ஆனால் புத்தியுள்ள கன்னிகைகளோ சர்வ வல்லமையுள்ள இயேசு ராஜா (மணவாளன்) எப்பொழுது வந்தாலும் அவரை சந்திக்க ஆயத்தமுள்ளவர்களாக இருந்தார்கள். **புத்தியுள்ள கன்னிகைகளின் தீவட்டிகள் எரிந்து கொண்டே இருந்தது போல நமது ஆவிக்குரிய வாழ்க்கையும் அனல் உள்ளதாக இருக்க வேண்டும்.**

கர்த்தருக்கு, கர்த்தருடைய நாம மகிமைக்கென்று, கர்த்தர் நமக்குத் தந்த ஊழியங்களில், அன்பின் நற்பணிகளில் எப்பொழுதும் பெருக வேண்டும். நமது ஊழிய பாத்திரங்கள் எப்பொழுதும் நிரம்பி வழிய வேண்டும்.

**"ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1கொரி. 15:58)** மணவாளன் வருகை தாமதித்தாலும் புத்தியுள்ள கன்னிகைகளின் தீவட்டிகள் எரிந்து கொண்டே இருந்தது. ஆனால் புத்தியில்லாத கன்னிகைகளோ மணவாளன் வர தாமதித்தபொழுது அவர்களுடைய தீவட்டிகளிலிருந்த எண்ணெய் தீர்ந்துபோகிறது, இருள் சூழ்ந்து கொள்கிறது. மணவாளன் வரும் பொழுது ஆயத்தம் இல்லாமல் தேவனுடைய ராஜ்யத்திலிருந்து தள்ளப்படுகிறார்கள்.

ஆம் பிரியமானவர்களே! முந்தைய காலங்களை பார்க்கிலும் நாம் இன்னும் அதிகமாய் அவருடைய வருகைக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். சங்கீதங்களினாலும், ஞானப்பாட்டு களினாலும் தேவனை துதித்து, கர்த்தரை போற்றி பாடி, பரிசுத்த வேதாகமத்தை தியானம் செய்து ஒவ்வொரு நிமிடமும் அவர் வருகைக்காய் ஆயத்தமாக இருப்போம். அப்பொழுது மணவாளன் இயேசு வரும்பொழுது நம்மை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வார். ஏசாயா என்னும் பக்தன் கூறுவதை போல **"அவர் மீது கொண்ட வாஞ்சையால் அதிகாலையிலும், இரவிலும் அவரை தேட வேண்டும்" (ஏசாயா 26:9; சங்.119:55, 61,97,147; சங்.61:1-3)**

நம்முடைய வாழ்க்கை எப்பொழுது முடியும் என்று நமக்குத் தெரியாது. நேற்று இருந்தவர்கள் இன்றைக்கு இல்லை. அநேக நீதிமான்கள் அவ்வப்போது முன்கூட்டியே கர்த்தரால் முன்குறிக்கப்பட்டு உலகை விட்டு கடந்து போவதை நாம் பார்க்கிறோம். வேத வசனத்தின்படி ஆபத்து காலம் வரும் முன் அநேக நீதிமான்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். **(ஏசாயா 57:1-2)** சிலர் அவருடைய இரண்டாம் வருகைக்காய் ஆவலோடு காத்திருக்கிறார்கள். எனவே, வாழ்க்கையில் எவ்வகையான போராட்டங்கள், புயல்கள் அடித்தாலும் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் நிலைத்திருப்போம், அவருக்கு சாட்சியாக வாழ்வோம்.

## (iv) துயரத்தை ஆனந்த தைலமாய் மாற்றும் அபிஷேக எண்ணெய் நிரம்பிய பாத்திரங்கள்!

**சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார். அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப் படுவார்கள். (ஏசாயா 61: 3)**

இயேசு கிறிஸ்து உலகத்தில் வாழ்ந்தப் பொழுது **மத்தேயு 5:4-ன்படி "துயருவோர் பேறு பெற்றோர் அவர்கள் ஆறுதல் அடைவார்கள்"** என்று கூறினார். ஆம். இயேசு அதை செய்தும் காண்பித்தார். பலவிதங்களில் கண்ணீர் வடிக்கிற மக்களுடைய கண்ணீரை துடைத்து அற்புதங்களை செய்து அவர்கள் மகிழ்ச்சியோடு தேவனை துதிக்கும்படி செய்தார். அவரால் செய்யப்படாத அற்புதங்கள் என ஒன்றுமே இல்லை. நம்முடைய எல்லாவித துயரங் களையும் அது எப்படிப்பட்ட நீங்காத துயரமாக இருந்தாலும் அதனை நம்மை விட்டு அகற்றி நம்மை தேற்றுகிறார்.

நம்முடைய அன்பரின் ஊழிய பத்திரிக்கைகள், அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சிகள்,குடும்ப ஆசீர்வாதக்கூட்டங்கள், மற்றும் தனி ஜெபங்கள் வாயிலாக ஏராளமான மக்களின் கண்ணீரை இயேசு துடைத்துக் கொண்டு இருக்கிறார். அவற்றைக் குறித்து youtube-ல் Ministry of Jesus சேனல் வாயிலாக அறிந்துக் கொள்ளலாம். எண்ணி முடியாத அதிசயங்களை அவர் கடந்த 35 ஆண்டுகள் எங்களுடைய ஊழியப் பாதையில் செய்திருக்கிறார். கர்த்தருடைய நாமத்திற்கே மகிமை உண்டாவதாக!

நம் இரட்சகராகிய இயேசு இன்றைக்கும் உங்கள் கண்ணீரை துடைத்து, உங்களை ஆனந்த தைலத்தினால் நிரம்பிய பாத்திரங்களாய் வைப்பார். எனவே மனங்கலங்காதீர்கள்!

## 4. உங்களை ஆறுதல்படுத்தி, தேற்றி, கனப்படுத்தும் பொற்பாத்திரங்கள்!

**ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு. அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்கு மானவைகள். (2தீமோ.2:20)**

கனமுள்ள பாத்திரங்கள் கனவீனமான பாத்திரங்கள் சில உண்டு என்பதை பரிசுத்த வேதாகமம் நமக்கு சொல்கிறது. சுத்தப்படுத்து வதற்காக மட்டும் பயன்படுத்தும் தண்ணீர் உள்ள பாத்திரங்கள், நாம் தண்ணீர் குடிப்பதற்காக உபயோகப்படுத்தும் சில்வர் பாத்திரங்கள், மண் பாண்டங்கள், பீங்கான், வெள்ளி மற்றும் பொற் பாத்திரங்கள் என பல உண்டு. இவைகளில் எதற்கு நாம் அதிக கனத்தையும், மதிப்பையும் தருகிறோம். வெள்ளி மற்றும் பொற் பாத்திரங் களை அதிக கவனமாய் பயன்படுத்துகிறோம். மிகப்பெரிய பணக்கார ஹோட்டல்களில், பணக்காரர்களின் வீடுகளில் இவற்றை நாம் காணலாம்.

ஒரு குறிப்பிட்ட நாட்டில் உள்ள ஹோட்டலில் மற்றும் இன்னொரு பெரிய பணக்காரருடைய விமானத்தில் அனைத்தும் பொன்னால் செய்யப்பட்டு இருந்ததை உங்களில் சிலர் தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கலாம். முகத்தை கழுவ பயன்படுத்தும் வாஷ் பேசின் முதற்கொண்டு கைப்பிடிகள் வரை அனைத்தும் பொன்னால் செய்யப்பட்டிருந்தது. அப்படி யானால் அவர்கள் எவ்வளவு பெரிய பணக்காரர் களாக இருக்க வேண்டும். ஆனால் **கர்த்தர் இயேசு இதைப்பார்க்கிலும் மேன்மையாக நம்முடைய வாழ்க்கையை கனத்திற்குரிய பொற்பாத்திரமாய் மாற்றுகிறார்.**

ஒரு சமயத்தில் நாம் இஸ்ரவேலின் காணி யாட்சிக்கு புறம்பாய் இருந்தோம், நம்பிக்கை யற்று இருந்தோம். ஆனால் இப்பொழுதோ ராஜரீக குடும்பத்தாராகிய தேவ பிள்ளைகளோடு சேர்ந் துள்ளோம். பரலோக தூதர்களோடும் சேர்ந் துள்ளோம் **(எபேசியர் 2:12). நம்மை பரலோக வாசியாக கர்த்தர் மாற்றியுள்ளார். எனவே இயேசுவாலும், அவரது வசனத்தி னாலும், அவர் நாமத்தினாலும், அவருடைய இரத்தத்தினாலும் பொற்பாத்திரமாக மாற்றப்பட்ட நாம் அந்த கனத்திலேயே, அந்த தகுதியிலேயே இருப்போம்.** அதை விட்டு விலகாமல் இருப்போம். கர்த்தர் உங்களை பாதுகாப்பார். பொற்பாத்திரமான நம்மிலிருந்து புறப்படுகிற தேவனுடைய ஒளி ஆயிரக்கணக் கான மக்கள் மீது வீசும். இதற்காகத் தான் அவர் நம்மை நாடோறும் புடமிடுகிறார், சீர்ப்படுத்து கிறார், உற்சாகப்படுத்துகிறார், வழிநடத்துகிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார் - 1தெச. 5: 23,24** நாம் ஒவ்வொரு நாளும் அவரை நோக்கி கண்ணீரோடு விண்ணப்பம் செய்ய வேண்டும். பக்தன் பாடுவது போல,

**ஒன்றும் இல்லாமல் உந்தன் பாதத்தில்
விழுந்தேன்!
நான் வெறுமையான பாத்திரம்
உபயோகம் செய்யுமே"**

என்று நாமும் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்வோம். அப்போது கர்த்தர் நம்மை உயர்த்துவார், கனப்படுத்துவார், முடிவில் மகிமையின் வாடாத கிரீடத்தை நம் மீது வைப்பார். அவரது கிருபையும் சமாதானமும், அவர் தரும் சந்தோஷம், தயவு, அன்பு எப்போதும் உங்களுடனும், உங்கள் குடும்பத்திலுள்ள அனைவரோடும் இருப்பதாக! ஆமென்! அல்லேலூயா!

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

2 கொரிந்தியர் 9:7

## அன்பரின் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புவதற்கான எளிய வழிகள்

**மணியார்டர் (MO) / காசோலை (cheque) / வரைவோலை (DD)**
**Online Donation (Website)**
**Bank Account / QR Code**
**UPI / Google pay / Paytm / Phonepe**

UPI Google Pay Paytm PhonePe

**இந்த QR code-ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது 95004 87061 என்ற எண் மூலமும் பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் மூலமாகவும் காணிக்கை அனுப்பலாம்.**

## வங்கிக் கணக்குகளின் விபரம்



| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| A/c no. 10848469699 | A/c no. 10848559426 | A/c no. 10848474869 |

**IFS Code: SBIN 0000930**
**State Bank of India, Cantonment, Trichy Main Branch.**

**காணிக்கையை நீங்கள் அனுப்பியவுடன் எங்களது 95004 87061 என்ற எண்ணிற்கு தொடர்புக்கொண்டு காணிக்கை அனுப்பிய விபரத்தை தெரியப்படுத்துங்கள். நேரில் அல்லது கூட்டங்களில் எங்களை சந்தித்து காணிக்கையை தரவிரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்புக்கொள்ளுங்கள். (10.00 AM - 6.00 PM)**

## Cell no. 94888 45627, 80987 42638

**உங்களுடைய உற்சாகமான காணிக்கைகள், தசமபாக காணிக்கைகள், பொருத்தனை காணிக்கை மற்றும் ஸ்தோத்திர காணிக்கையை அனுப்பி அன்பரின் ஊழியத்தை தாங்குங்கள்.**

கர்த்தர் நிச்சயமாக இதற்குரிய பலனை பல ஆயிரம் மடங்காக தந்து உங்களை ஆசீர்வதிப்பார்!

**அன்பரின் ஊழியத்தின் முகவரி : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்**
**10வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 620018.**

Trichy

# WE ARE HIRING



- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Camera Man**
  **with adequate experience**
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**

# அன்பரின் ஊழிய ஜெப ஸ்தல கட்டிடத்தில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள்!

...அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள். நெகேமியா 2:18

அன்பு பங்காளர்களே, வாசகர்களே மற்றும் அன்பிற்குரியவர்களே, உங்கள் ஒவ்வொருவரையும் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற இனிதான நல்ல நாமத்தில் அன்போடு வாழ்த்துகிறேன். அன்பரின் ஊழிய ஜெபஸ்தலத்தில் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளைப் பற்றி உங்களோடு பகிர்ந்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலமானது 2013-ம் ஆண்டு திருச்சியில் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த நாள் முதல் இந்நாள் வரை கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு மேல் ஜாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி பலதரப்பட்ட மக்கள் பல இடங்களிலிருந்து பிராத்தனைக்காக வந்து தேவ ஆசீர்வாதங்களையும், பல நன்மைகளையும் பெற்று செல்கிறார்கள்.

...என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும். [ஏசாயா 56:7]

அனுதினமும் பலவிதமான பிரச்சனைகளுடன் போராடி, கண்ணீர், கவலைகளோடு வாழ்ந்துக்கொண்டிருக்கும் மக்கள் இங்கு நேரில் வந்து ஜெபிக்கின்றனர். கர்த்தர் தாமே அவர்களை ஆறுதல்படுத்தி மகிழ்ச்சியாக்கி அனுப்புகிறார். அநேகர் அற்புதங்களையும் அதிசயங்களையும் தங்கள் வாழ்வில் பெற்று ஆசீர்வதிக்கப்படுகின்றனர். இந்த ஜெப ஸ்தலத்தின் செயல்பாட்டிற்காகவும், இதனால் பயன்பெறுகிற மக்களுக்காகவும் கர்த்தரை மனதார ஸ்தோத்தரிப்போம்.

இயல்பாகவே ஒரு கட்டிடம் 10 ஆண்டுகளை நிறைவு செய்யும் பட்சத்தில் பலவிதமான பழுதுகள் வருவது வழக்கம். அவ்வாறே நம்முடைய ஜெப ஸ்தல கட்டிடத்தின் வெளிப்புறத்தில் ஆங்காங்கே காணப்படும் வெடிப்புகள், நீர் கசிவு மற்றும் அவசர கட்டமாக சரிசெய்யவேண்டிய சில பழுதுகள் என பல பணிகள் இருக்கிறது. இவைகளை நாம் மழைக்காலம் வருவதற்கு முன்பாகவே சரிசெய்து முடிக்க வேண்டும்.






அத்துடன் அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் உயரமான கட்டிடமாக இருப்பதால் உயரத்தில் நின்று பணிசெய்வதற்காக சாரம் அமைக்கவே ஒரு பெரும் தொகை தேவைப்படுகிறது. அதோடுகூட Civil Work, Chemical Work, Plumbing Work, Painting Work என பல பணிகளை ஜெப ஸ்தல கட்டிடத்தின் வெளிச்சுவரின் நான்கு பக்கங்களும் நேர்த்தியாக செய்து முடிப்பதற்கு ஆகும் செலவு பொறியாளர்களால் மதிப்பிடப்பட்டு, ஏறக்குறைய 30 இலட்சம் ரூபாய் வரை தேவைப்படும் என திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 29-ம் தேதி நம் கையில் இருந்த சொற்ப தொகையைக் கொண்டு விசுவாசத்தோடு சீரமைப்பு பணிகளை துவங்கிவிட்டோம். தற்பொழுது பணிகள் துரிதமாக நடைபெற்று கொண்டிருக்கிறது. அன்பு சகோதர, சகோதரிகளே, பத்திரிக்கை வாசகர்களே, ஊழியத்தை நேசிக்கிற நீங்கள் ஜெப ஸ்தல கட்டிடத்தை புதுப்பித்து, சீரமைக்கும் பணிக்காக உங்களால் இயன்ற காணிக்கையை கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம். கர்த்தருடைய ஜெப வீட்டின் பணிக்கென்று தாராளமாய் கொடுக்கும்பொழுது கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் அபரிமிதமாய் ஆசீர்வதிப்பார்.

கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். (லூக்கா 6:38), இப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள், உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள். (1நாளா. 29:9)

## உடனடி தேவை – 30 இலட்சம்

**Rs.10,000 கொடுத்து தாங்கக்கூடியவர்கள் 300 பேர் தேவை!**

அல்லது

**Rs.20,000 கொடுத்து தாங்கக்கூடியவர்கள் 150 பேர் தேவை!**





இதுவுமில்லாது எவ்வளவு தொகை வேண்டுமானாலும் நீங்கள் சந்தோஷமாக கொடுக்கலாம். உங்களால் இயன்ற உற்சாகமான, மனப்பூர்வமான காணிக்கைகளை கீழ்க்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பும்படியாக கேட்டுக்கொள்கிறோம். மேலும் காசோலை, வரைவோலை, மணியார்டர் வாயிலாகவும் அனுப்பலாம். எங்களை நேரில் சந்தித்தும், அல்லது கூட்டங்களுக்கு வந்தும் உங்கள் காணிக்கைகளை தரலாம். நீங்கள் அனுப்பும்பொழுது அன்பரின் ஊழிய ஜெப ஸ்தல கட்டிடம் சீரமைக்கும் பணிக்கு என குறிப்பிட்டு அனுப்புங்கள்.

**MINISTRY OF JESUS**
**A/c No. 10848474869**
**State Bank of India**
**Cantonment**
**Trichy Main Branch**
**IFS code: SBIN 0000930**

**Google Pay, Paytm, PhonePe, etc..** மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்கிற்கு காணிக்கை அனுப்பலாம். பண பரிமாற்ற செயலிகள் வாயிலாக காணிக்கை அனுப்ப விரும்புகிறவர்கள் மேலும் விபரங்கள் அறிய இந்த பத்திரிக்கையின் 12-ம் பக்கத்தில் பார்த்து அதற்குரிய விபரங்களை அறிந்துக் கொள்ளலாம்.

காணிக்கை அனுப்பிய விபரத்தை SMS மூலம் தெரிவிக்க வேண்டிய எண்: 95004 87061.
கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. (மல்கியா 3:10) (ரோமர் 12:13a)

சீரமைக்கும் பணிக்காக தினந்தோறும் ஜெபியுங்கள்:

- உயரமான இடத்தில் ஏறி வேலை செய்யும் வேலையாட்களின் பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்.
- வேலைகள் அனைத்தும் தடையின்றி நேர்த்தியாக செய்து முடிக்கப்பட ஜெபியுங்கள்
- பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்



# Praise Report
# துதி அறிக்கை

## கர்த்தர் கொடுத்த அற்புத சுகத்தைப் பார்த்து அவரை ஏற்றுக் கொண்ட குடும்பத்தினர்

என் அக்கா மகன் பெயர் தஷ்வந்த். அவனுக்கு 10 வயதாக இருக்கும்பொழுது இரண்டு கிட்னியும் செயலிழந்து விட்டது. மருத்துவர் இவனுக்கு



ஆப்ரேஷன் செய்ய 10 இலட்சம் செலவாகும். அத்துடன் 6 வருஷம் தான் உயிரோடு இருப்பான் என சொல்லி விட்டார்கள். நாங்கள் அனைவரும் கலங்கிப்போய் இருந்தோம்.

அந்த நேரத்தில் பக்கத்து வீட்டில் **உள்ளவர்கள் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்திற்கு எங்களை அழைத்து வந்தார்கள். Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் என் அக்கா மகனுக்காக பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். ஜெபத்திற்கு பின் மகனுடைய உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டு இயல்பு நிலைக்கு வந்து விட்டான். இதுவரை அவனுக்கு சிறுநீரகத்தில் எந்த பாதிப்பும் இல்லை. ஆண்டவர் கிருபையால் நன்றாக இருக்கிறான். தற்பொழுது 10-ம் வகுப்பு தேர்வில் 485 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெறவும் கர்த்தர் உதவி செய்தார். எந்த வித ஆப்ரேஷன் இல்லாமல் இம்மட்டும் நல்ல சுகத்துடன் அவனை பாதுகாத்து வருகிற கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம். இந்த அற்புதத்தின் வாயிலாக நாங்கள் அனைவரும் இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டோம்.**

என் அண்ணனுக்கு முதல் திருமணமும், 2-வது திருமணமும் விவாகரத்து ஆகிவிட்டது. அதனால் நாங்கள் அனைவரும் சோர்ந்து போய் இருந்தோம். கடந்த வருடம் திருச்சியில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு வந்திருந்தப்பொழுது **Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் என் அண்ணனிடம், தம்பி நீ கலங்காதே, கர்த்தர் இன்று முதல் உன்னுடைய கண்ணீர், கவலையிலிருந்து விடுதலையாக்குகிறார், உனக்கு ஏற்ற பெண்ணை தருவார், குடும்ப வாழ்க்கையை ஆசீர்வதிப்பார் என சொன்னார்கள். அதன்படி கர்த்தர் ஆவிக்குரிய ஜீவியத்தில் உள்ள நல்ல பெண்ணை என் அண்ணனுக்கு துணையாக தந்திருக்கிறார். கர்த்தருக்கு எங்கள் ஸ்தோத்திரங்களை செலுத்துகிறோம். சகோதரர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவிக்கிறோம்.**

**- திருமதி. கோகிலா, காரைக்குடி.**

## மருத்துவ படிப்பிற்கான இடம் கிடைக்க தயை செய்த கர்த்தர்

என் பெயர் சந்திரா. 2019-ம் ஆண்டு என் மகள் நீட் தேர்விற்காக தயார் ஆகிக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு நானும் என் மகளும் வந்திருந்

தோம். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் என் மகளுக்காக ஜெபித்துவிட்டு, நீ நீட் தேர்வில் வெற்றி பெற்று, Merit-ல் மருத்துவ படிப்பிற்கான இடம் கிடைத்து நன்றாக படிப்பாய் என சொன்னார்கள்.



**சகோதரர் சொன்ன தீர்க்க தரிசனத்தின்படியே என் மகள் நீட் தேர்வில் வெற்றியடைந்து, வேலூர் அரசு மருத்துவ கல்லூரியில் 3-ம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறாள். அரசாங்கமே மகளுடைய படிப்பிற்கான அனைத்து செலவுகளையும் பொறுப்பெடுத்துக் கொண்டது. ஏழைக்கு இரங்கிய கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன். சகோதரர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, ஊழியத்திற்கான பொருத்தனை காணிக்கையைத் தருகிறேன்.**

**- திருமதி. சந்திரா, பட்டுக்கோட்டை.**

## படிப்பிலிருந்த மந்த நிலையை மாற்றி ஜெயத்தைக் கொடுத்த கர்த்தர்

என் பேத்தி பெயர் அன்பரசி. அவள் 10-ம் வகுப்பு தேர்வில் 15, 20 மதிப்பெண்கள் தான் எடுப்பாள். இதனால் நாங்கள் அவளை கண்டிப் போம். **பேத்தியின் இந்த நிலையை அன்பரின் ஊழியத்திற்கு கடிதம் வாயிலாக தெரிவித்து பேத்திக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். அதன்பின் அவள் படிப்பில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. 60, 70 மதிப்பெண்கள் எடுக்க ஆரம்பித்தாள். தற்பொழுது 10-ம் வகுப்பு தேர்வில் 410 மதிப்பெண்கள் எடுக்கும்படி கர்த்தர் உதவி செய்தார்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.



**- திருமதி. சரோஜா, மதுரை.**

## நினைப்பதற்கும் அதிகமாய் செய்து வேலையைத் தந்த கர்த்தர்!





என் மகன் 5 வருடத்திற்கு முன்பு BE Aeronautical முடித்து வேலை இல்லாமல் கஷ்டப்பட்டான். பாளையங்கோட்டையில் நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்து, **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் மகனுடைய வேலைக்காக ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் ஜெபித்து விட்டு மகனை வேறு ஒரு துறை சார்ந்த படிப்பை படிக்க வையுங்கள் என சொல்லி அனுப்பினார்.

**அதன் பின் மகன் பெங்களூரில் 6மாத சாப்ட்வேர் கோர்ஸ் படித்தான். படித்து முடித்தவுடன் அந்த இடத்திலேயே ஒரு இலட்சம் ரூபாய் சம்பளத்தில் மகனுக்கு வேலை கிடைத்தது. இப்பொழுது மகன் திருமணம் முடிந்து ஒரு குழந்தையுடன் பெங்களூரில் இருக்கிறான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஏற்றநேரத்தில் நல்ல ஆலோசனை தந்த சகோதரருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.**

**- திரு. பிலிப், திருநெல்வேலி**

## விதவையின் கண்ணீரை கண்ட கர்த்தர்

என் பெயர் பாக்கியமணி. 21 வருடங்களுக்கு முன்பாக என் கணவர் இறந்து விட்டார். அப்பொழுது திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்தேன். செய்தி வேளையில்

கூட என் பிள்ளைகளை நான் எப்படி வளர்க்கப் போகிறேன் என நினைத்து அழுதுக் கொண்டே அமர்ந்திருந் தேன்.

ஜெப நேரத்தில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் என்னை பெயர் சொல்லி அழைத்து, **நீ கலங்காதே, உன் பிள்ளைகளை கர்த்தர் படிக்க வைப்பார், அவர்களுக்கு நல்ல வேலையைத் தருவார். உன் குடிகார மகனை கர்த்தர் சந்திப்பார் என தீர்க்க தரிசனமாக சொல்லி ஜெபித்தார்கள். இப்பொழுது என் பிள்ளைகள் அனைவரும் படிப்பை முடித்து நல்ல வேலையில் இருக்கிறார்கள். விசேஷமாக குடிபழக்கத்திற்கு அடிமையாக இருந்த மகனை கர்த்தர் முற்றிலும் மாற்றி விட்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.**



**- திருமதி. பாக்கியமணி, கலுங்குவிளை.**

## கண்ணீரைத் துடைத்து வேலையைக் கொடுத்த கர்த்தர்!



என் பெயர் பியூலா. கடந்த மார்ச் மாதம் திருநெல்வேலியில் நடைபெற்ற தனி ஜெபத்திற்கு நானும் என் மகளும் மிகுந்த வேதனையுடன் வந்திருந்தோம். **Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் மகளுடைய வேலைக்காக விசேஷமாக ஜெபிக்கும் படி சொன்னோம்.**

**சகோதரர் ஜெபித்து விட்டு ஜூன் மாதத்திற்குள் வேலை கிடைக்கும் என சொல்லி அனுப்பினார்கள். சகோதரர் சொன்ன வார்த்தையின்படியே 1 ரூபாய்கூட செலவில்லாமல் ஏப்ரல் மாதமே மகளுக்கு கல்லூரியில் பேராசிரியர் வேலை கிடைக்க கர்த்தர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! சகோதரருக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.**

**- திருமதி. பியூலா, பாளையங்கோட்டை.**

## தடையை நீக்கி பதவி உயர்வை அருளிய கர்த்தர்!



என் பெயர் ரூபன். கடந்த நாட்களில் திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் வந்திருந்து, என்னுடைய வேலையினிமித்தம், பதவி உயர்வினிமித்தம் நான் அதிக வேதனையுடன் பாரத்துடன் அழுது ஜெபித்துக் கொண்டிருந்தேன். கூட்டம் முடிந்து Dr. **ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் என் நிலையைச் சொல்லி ஜெபிக்கும்படி சொன்னேன். **சகோதரர் எனக்காக ஜெபித்து விட்டு, உனக்கு பதவி உயர்வு வரும். சாட்சி சொல்வாய், ஊழியத்தை தாங்குவாய் என சொல்லி அனுப்பினார்கள்.**

**அதன்பின் உயர் அதிகாரிகள் மற்றும் அனைவரின் கண்களில் கர்த்தர் தாமே எனக்கு தயவு கிடைக்கச் செய்து பதவி உயர்வு மற்றும் Appraisal கொடுத்து இரட்டிப்பான ஆசீர்வாதங்களைத் தந்தார். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக!** எனக்காக பாரத்துடன் ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

**- திரு. ரூபன், திருநெல்வேலி.**

## மத்திய அரசாங்க வேலையைத் தந்த கர்த்தர்!

எனக்கு மூன்று பிள்ளைகள். மூத்த மகள் பி.இ. முடித்துவிட்டாள். அவளுடைய மேற்படிப்பிற்கான ஆலோசனை பெற வேண்டி நாகர்கோவிலில் நடைபெற்ற தனி ஜெபத்திற்கு குடும்பமாக வந்திருந்தோம். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் மகளுக்காக ஜெபித்து விட்டு விரைவில் மத்திய அரசாங்க வேலை கிடைக்கும் என சொல்லி அனுப்பினார்கள். தற்பொழுது அவளுக்கு தபால் துறையில் வேலை கிடைத்துள்ளது. இயேசப்பாவிற்கு கோடி நன்றி செலுத்துகிறேன்.

**- பெயர் வெளியிட விரும்பாதவர்**

## தீர்க்கதரிசனத்தின்படியே நான்கு ஆசீர்வாதங்களை அருளிய கர்த்தர்!

எங்களுக்கு ஒரே ஒரு மகன். அவன் MCA முடித்து குறைந்த சம்பளத்தில் வேலை பார்த்தான். சம்பளம் குறைவாக இருப்பதால் வேலையை விட்டு நின்று விட்டான். அதனால் அவன் சோர்ந்துபோய் காணப்பட்டான். இருந்த வேலையையும் விட்டு விட்டேன். இனி என்ன செய்வது என திகைத்து நின்றான்.

அப்பொழுது **இராயப்பேட்டை YMCA-ல் நடைபெற்ற கூட்டத்திற்கு நாங்கள் வந்திருந்து Dr.ஆனந்த ஸ்திரா அவர்களிடம் மகனுக்காக ஜெபிக்கும்படி சொன்னோம். சகோதரர் ஜெபித்துவிட்டு மகனுக்கு கர்த்தர் நான்கு ஆசீர்வாதங்களைத் தருகிறார் என தீர்க்க தரிசனமாய் சொல்லி ஜெபித்து அனுப்பினார்கள்.**

அதன்பின் **மகனுக்கு IT கம்பெனியில் நல்ல சம்பளத்தில் வேலை கிடைத்தது. அடுத்து மகனுக்கு திருமணம் ஆனது. குழந்தை பிறந்தது. Car வாங்க கர்த்தர் உதவி செய்தார். இப்படியாக சோர்ந்துப்போய் இருந்த மகன் வாழ்வில் கர்த்தர் நான்கு ஆசீர்வாதங்களைத் தந்து பெலப்படுத்தினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.** மகனுக்காக ஊக்கமாய் ஜெபித்த சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**- திருமதி. பரிபூரணம் தங்கராஜ், சென்னை.**


### அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

**தமிழில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

நம்பிக்கை TELEVISION

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 முதல் 9.00 வரை

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

புதன், வியாழன், வெள்ளி,
இரவு 7.00 முதல் 7.30 வரை

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

HARVEST കേരളം

சனி
இரவு 7.30 முதல் 8.00 வரை

# ஜூலை மாதத்திற்குரிய தினசரி வாக்குத்தத்த வசனங்கள்

## கனம் - மகிமை

| | |
|---|---|
| ஜூலை 1 | ... உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக. (யாத்தி. 20:12) |
| ஜூலை 2 | வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென் றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும். (சங். 112:9) |
| ஜூலை 3 | தாவீது சவுலுடைய ஊழியக்காரர் எல்லாரைப் பார்க்கிலும் புத்திமானாய் நடந்து கொண்டான்; அவன் பேர் மிகவும் கனம் பெற்றது. (1 சாமு. 18:30) |
| ஜூலை 4 | நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது. (சங். 85:9) |
| ஜூலை 5 | தரித்திரனுக்குத் தயை செய்கிறவனோ அவரைக் கனம்பண்ணுகிறான். (நீதி. 14:31) |
| ஜூலை 6 | எல்லாரையும் கனம்பண்ணுங்கள். (1பேதுரு 2:17) |
| ஜூலை 7 | நான் என் பிதாவைக் கனம் பண்ணுகிறேன். (யோவான் 8:49) |
| ஜூலை 8 | இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடு களினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள். (ஏசாயா 29:13) |
| ஜூலை 9 | நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன். (1 இராஜா. 3:13) |
| ஜூலை 10 | எவனைக் கனம் பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள். (ரோமர் 13:7) |
| ஜூலை 11 | அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுண்டாகக் காணப்படும். (1பேதுரு 1:7) |
| ஜூலை 12 | வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார். (லூக்கா 1:49) |
| ஜூலை 13 | கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். (ரோமர் 12:10) |
| ஜூலை 14 | கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம் பண்ணுகிறான். (சங். 15:4) |
| ஜூலை 15 | நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். (1 கொரி. 10:31) |

| | |
|---|---|
| ஜூலை 16 | நாமெல்லாரும் திறந்தமுகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். (2 கொரி. 3:18) |
| ஜூலை 17 | … யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம் பண்ணுங்கள். (சங். 22:23) |
| ஜூலை 18 | உன் பொருளாலும், உன் எல்லாவிளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. (நீதி. 3:9) |
| ஜூலை 19 | நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம் பெற்றாய். (ஏசாயா 43:4) |
| ஜூலை 20 | ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார். (யோவான் 12:26) |
| ஜூலை 21 | உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும், உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக. (சங். 90:16) |
| ஜூலை 22 | அவர் உங்களிடத்தில் எவ்வளவு மகிமையான காரியங்களைச் செய்தார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். (1சாமு. 12:4) |
| ஜூலை 23 | உனக்குச் சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய பட்டயமும் அவரே. (உபாகமம் 33:29) |
| ஜூலை 24 | உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும். கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். (ஏசாயா 58:8) |
| ஜூலை 25 | ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக் கொள். … அது மகிமையான கிரீடத்தை உனக்குச் சூட்டும். (நீதி. 4:7,9) |
| ஜூலை 26 | யாபேஸ் தன் சகோதரரைப் பார்க்கிலும் கனம்பெற்றவனாயிருந்தான். (1 நாளா. 4:9) |
| ஜூலை 27 | என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன். (1 சாமு. 2:30) |
| ஜூலை 28 | கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமும், உன் தேவனே உனக்கு மகிமையுமாயிருப்பார். (ஏசாயா 60:19) |
| ஜூலை 29 | நான் உண்டு பண்ணின எல்லா ஜாதிகளைப் பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன். (உபா. 26:19) |
| ஜூலை 30 | நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய். (யோவான் 11:40) |
| ஜூலை 31 | உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும். (ஏசாயா 60:2) |

# உலகச் செய்திகள்

- ❖ மனிதர்கள் நிலத்துக்கு அடியில் இருக்கும் தண்ணீரை அளவுக்கு அதிகமாக உறிஞ்சி வெளியேற்றி வருவதன் காரணமாக பூமி 1993-2020 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 80 சென்டிமீட்டர் அளவுக்கு கிழக்குப் பகுதியில் சாய்ந்து உள்ளதாக விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளனர்.
- ❖ அமெரிக்க புவியியல் ஒன்றியத்தின் நாளிதழான ஜியோபிஸிக்கல் ரிசர்ச் லெட்டர்சில் வெளியாகி உள்ள ஆய்வு முடிவுகள் இதனைத் தெரிவித்துள்ளது. மேற்கண்ட காலகட்டத்தில் மக்கள் 2,150 ஜிகாடன் நிலத்தடி நீரை 6 மில்லிமீட்டர் (0.24 அங்குலம்) கடல் மட்டத்திற்கு சமமாக உயர்த்தி உள்ளதாக கண்டுபிடித்துள்ளனர்.
- ❖ கடந்த காலங்களில் துருவங்களின் சறுக்கல் கடல் நீரோட்டங்கள் மற்றும் பூமிக்கு அடியில் ஆழமான வெப்பமான பாறைகளின் வெப்பசலனம் போன்ற இயற்கை இடர்பாடுகளால் மட்டுமே மேற்கண்ட மாற்றங்கள் ஏற்பட்டது. ஆனால் புதிய ஆராய்ச்சி முடிவுகள் நிலத்தடி நீரை மறுபகிர்வு செய்வதே இந்த பூமியின் சாய்வுக்கான முதன்மை காரணியாக கண்டறிந்துள்ளனர்.
- ❖ மேலும், பூமியின் சுழற்சி துருவம் உண்மையில் நிறைய மாறுதல்களை கண்டுள்ளது என ஆய்வுக்கு தலைமை தாங்கிய சியோல் தேசிய பல்கலைக்கழகத்தின் புவி இயற்பியலாளர் கி.வியோன் சியோ தெரிவித்துள்ளார். இதனை ஆய்வில் ஈடுபடாத ஜெட் பிரபல்சன் ஆய்வகத்தின் ஆராய்ச்சி விஞ்ஞானி சரேந்தரும் ஒப்புக் கொண்டுள்ளார்.
- ❖ இவ்வாறு நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சியதால் ஏற்பட்ட மாற்றங்களால் பருவங்கள் மாறும் அபாயம் இல்லை. அதே வேளையில் புவியியல் நேர அளவீடுகளில் துருவ சறுக்கல் கால நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ காலநிலை தொடர்பான காரணங்களில் நிலத்தடி நீரின் பகிர்வு உண்மையில் பூமி சுழற்சி சறுக்கலில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை ஆய்வு உறுதிப்படுத்தி உள்ளதாக விஞ்ஞானி சியோ கூறியுள்ளார். மேலும் மத்திய அட்சரேகையில் இருந்து தண்ணீரை மறு பகிர்வு செய்வது துருவ சறுக்கலை கணிசமாக பாதிக்கிறது.
- ❖ பெரும்பாலான மறுபகிர்வு வடஅமெரிக்கா மற்றும் வடமேற்கு இந்திய பகுதியில் நிகழ்ந்துள்ளது. இந்த இரண்டு பகுதிகளும் மத்திய அட்சரேகைகளில் அமைந்துள்ளன. பூமியின் சுழற்சியை மாற்றுவதில் நீரின் பங்கு இருப்பதாக கடந்த 2016-ல் கண்டு பிடிக்கப்பட்டது.
- ❖ ஆனால் இப்போது வரை அதன் சறுக்கல்களுக்கான நிலத்தடி நீரின் பங்களிப்பு குறித்து ஆய்வு செய்யப்படவில்லை. இதுவே முதன் முறை என தெரிவித்துள்ளனர்.
- ❖ ஆனால் நிலத்தடி நீர் மட்டம் குறைவதை தடுக்க பல நாடுகள் பல்வேறு திட்டங்களை தீட்டுவதன் மூலம் பூமியின் சுழற்சி மாற்றத்தை மீண்டும் மாற்ற இயலும் என விஞ்ஞானிகள் நம்பிக்கைத் தெரிவித்துள்ளனர்.
- ❖ இதன் பிசிகல் ரிசர்ச் லெட்டர்ஸ் இதழில் வெளியிடப்பட்ட 2021 ஆய்வில், 1995-ம் ஆண்டில் துருவ சறுக்கலின் திசை தெற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகர்ந்தது. அதே போன்று 1995-2020 வரையிலான சராசரி சாய்வின் வேகம் 1981-95 ஒப்பிடும் போது 17 மடங்கு வேகமாக இருந்ததாக தெரிவித்துள்ளனர்.
- ❖ கடந்த 50 ஆண்டுகளில் மனிதர்கள் நீர் நிலைகளில் இருந்து 18 ட்ரில்லியன் டன் தண்ணீரை மாற்றாமல் பிரித்தெடுத்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.



# SJ SAVES TRUST
## மூலமாக செய்யப்பட்ட அறப்பணிகள்

**இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான். மத்தேயு 18:5**

மே மாதம் 28-ம் தேதி மேட்டுப்பட்டி பகுதியிலுள்ள நாட்டா மங்கலத்தில் Hebron Center-ல் வைத்து S.J.S.T பிள்ளைகளுக்கான இரண்டு நாள் சிறப்பு முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் காரிப்பட்டி, மின்னாம்பள்ளி, ஏரிபுதூர், கருமாபுரம் போன்ற இடங்களிலிருந்து 400 பிள்ளைகள் வந்து கலந்து கொண்டனர்.

**நிறுவனர் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் முகாமிற்கு வந்திருந்து, ஆங்கில புலமை என்ற தலைப்பில் மொழி திறன் பயிற்சியை பிள்ளைகளுக்கு அளித்தார்கள்.**

அத்துடன் பிள்ளைகள் தினந்தோறும் பள்ளிக்கு சுத்தமாக செல்லுதல், வீட்டுப் பாடங்கள் அனைத்தையும் சரியாக செய்து முடித்தல், ஆசிரியர்களை கனம் பண்ணுதல், பெற்றோருக்கு கீழ்ப்படிதல் போன்ற காரியங்களை அறிவுறுத்தினார்கள்.

**செஸ் மற்றும் பலவித விளையாட்டுகள் வாயிலாக அறிவுப் பூர்வமானவற்றை எப்படி நடப்பது என கற்றுக் கொடுத்தார்கள்.**

அதன்பின் 12 வகையான விளையாட்டு பொருட்கள், உபகரணங்களை நிறுவனர் அவர்கள பிள்ளைகளுக்கு கொடுத்து அவர்களோடு விளையாடி மகிழ்ந்தார்.

**முகாமிற்கு வந்திருந்த பிள்ளைகள் தங்களுக்கு விருப்பமான விளையாட்டை தேர்ந்தெடுத்து விளையாடினர்.**

இறுதியில் முகாமில் பங்குக்கொண்ட பிள்ளைகள் அனைவருக்கும் சிக்கன் பிரியாணி, இனிப்பு வகைகள் மற்றும் பரிசு பொருட்களை நிறுவனர் அவர்கள் வழங்கினார்கள்.

**பிள்ளைகள் தங்களுக்கு அளிக்கப்பட்ட பரிசு பொருட்கள், விளையாட்டு பொருட்களுடன் மகிழ்ச்சியோடு நன்றி கூறி சென்றனர்.**

விசேஷமாக இளம் பெண்களுக்கு எம்பிராய்டரி பயிற்சி, தையல் பயிற்சி, கூடை பின்னுதல் போன்ற பயிற்சிகளை சிறந்த தையல் ஆசிரியரைக் கொண்டு கற்றுத் தரப்பட்டது.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

## மே மாதம் நடைபெற்ற இரண்டு நாள் முகாமில் டியூஷன் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கப்பட்ட ஆங்கில பயிற்சி, நல்லொழுக்க பயிற்சி வகுப்புகள்






## மே மாதம் நடைபெற்ற பெண்களுக்கான பயிற்சி வகுப்புகளில் கற்றுக்கொடுக்கப்பட்ட பயிற்சிகள் (கூடை பின்னுதல், எம்பிராய்டரி, தையல்)







பயிற்சி பெற்றவர்களால் தைக்கப்பட்ட ஆடைகள்

# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

**நானே உன் பரிகாரியாகிய கர்த்தர். (யாத்தி. 15:26)**
**கர்த்தர் சகலநோய்களையும் உன்னை விட்டு விலக்குவார். (உபா. 7:15)**

சிறந்த மருத்துவராகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் ஒப்பற்ற கிருபையினால் S.J.S.T.மருத்துவமனைக்கு தினந்தோறும் நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். **Ultrasound Scan** வசதி அநேகருக்கு பிரயோஜனமாக இருந்து வருகிறது. மருத்துவமனைக்கு வருகிற ஒவ்வொரு நோயாளிகளையும் கர்த்தர் ஆசீர்வதித்து நல்ல சுகத்துடன் பாதுகாப்பாராக!

இன்னும் ஏராளமான நோயாளிகள் வந்து சிகிச்சைபெற தொடர்ந்து ஜெபியுங்கள். அத்துடன் மருத்துவமனையைக் குறித்து கர்த்தர் வைத்திருக்கிற திட்டங்கள் விரைவில் நிறைவேற ஜெபியுங்கள்.

விசேஷமாக மிஷனெரிகளைப் போன்று அர்ப்பணிப்போடு செயல்படுகிற நல்ல கிறிஸ்தவ மருத்துவர்கள் வந்து பணி செய்ய தொடர்ந்து ஜெபியுங்கள்.




## அன்பரின் ஊழிய சமூக வலைத்தள விபரங்கள்

**facebook**

Ministry of Jesus
My Deliverance Church
Ananda Stira
Margret Stira
Rev.Dr.A Joshua
Jane Joshua
Jonathanmosesstira

**Youtube**

Ministry of Jesus
My Deliverance Church
Dr Jane Joshua

**Twitter**

Ministry of Jesus
drjane15
My Deliverance Church
Jonathanstira

**Instagram**

ministryofjesus.in
dr.janejosh
mydeliverancechurch
Jonathanmosesstira

info@mojindia.org

www.ministryofjesus.in
www.mydeliverance.church
www.sjsavestrust.in



சென்னையில்
உங்கள் விடுதலையின் நாள்
நேரம்:
காலை 9.30 மணி
முதல்
மதியம் 1.00 மணி
வரை
ஆகஸ்ட் 15
செவ்வாய்
அரசுவிடுமுறை
இடம் :J.J. மஹால்
L.K.S.தங்க மாளிகை எதிரில்,
G.S.T .மெயின்ரோடு, கடப்பேரி,
மேற்கு தாம்பரம், சென்னை.
தேவ செய்தி
Rev. Dr. A. ஜாஷ்வா
தொடர்புக்கு : 94888 45627, 80987 42638




அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம்
ராஜமன்றியில்
ஜூலை 22
சனிக்கிழமை
இடம் : ஹோட்டல் ஷெல்டன்,
RTC காம்ப்ளக்ஸ் அருகில்,
இராஜமன்றி.
விஜயவாடாவில்
ஜூலை 23
ஞாயிற்றுக்கிழமை
இடம் : ஹோட்டல் அயிலாபுரம்,
கன்வென்ஷன் ஹால்,
இரயில்வே ஸ்டேஷன் ரோடு,
காந்திநகர், விஜயவாடா.
தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா
நேரம் : மாலை 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை
தொடர்புக்கு : 0431 2741926 & 94888 45627




புத்தம் புதிய நிகழ்ச்சி
அனுதின அற்புதம்
DAILY MIRACLE
தினமும் காலை 5 மணி
MINISTRY OF JESUS
இந்த QR CODE - ஐ ஸ்கேன் செய்து
நமது அனுதின அற்புதம் நிகழ்ச்சிகளைக்
காணலாம்.



# கோயம்புத்தூரில் நடைபெற்ற உங்கள் ஆசீர்வாதத்தின் நாள் கூட்டத்தில் Rev.Dr. A. ஜாஷ்வா அவர்கள் ஜெபத்தினால் மகத்துவ தேவன் செய்த அற்புதங்கள்! தேவ நாமம் மகிமைக்காக!

## பதவி உயர்வை அருளிய கர்த்தர்!



என் பெயர் அனில்குமார். ஜனவரி மாதம் கோயம்புத்தூரில் நடைபெற்ற உங்கள் ஆசீர்வாதத்தின் நாள் கூட்டத்திற்கு வந்திருந்தேன். கூட்டம் முடிந்து தனி ஜெபத்தில் **Rev. Dr. A.ஜாஷ்வா** அவர்களிடம் என்னுடைய பதவி உயர்விற்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். **பாஸ்டர் அவர்களும் பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் தாமே எனக்கு இரங்கி பதவி உயர்வையும், சம்பள உயர்வையும் கொடுத்துள்ளார். அதற்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கிறேன்.** பாஸ்டருக்கும் என்னுடைய நன்றியை கூறிக்கொள்கிறேன்.

**- திரு. அனில்குமார், கோயம்புத்தூர்**

## ஆஸ்திரேலியாவில் வேலை கொடுத்த கர்த்தர்!



என் பெயர் பால்ராஜ். என் மகள் மருமகன் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார்கள். மருமகனுக்கு வேலையில் ஏற்பட்ட பிரச்சனையின் நிமித்தம் ஜனவரி மாதம் கோயம்புத்தூரில் நடைபெற்ற உங்கள் ஆசீர்வாதத்தின் நாள் கூட்டத்திற்கு வந்திருந்தேன். **என்னுடைய மருமகனுக்கு வேலை கிடைக்க ஜெபிக்கும்படி ஜெப விண்ணப்பத்தில் எழுதிக் கொடுத்தேன். பாஸ்டர் அவர்களிடம் நேரிலும் சொல்லி ஜெபித்து வந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, மருமகனுக்கு ஆஸ்திரேலியாவில் வேலை கிடைக்கும்படி உதவி செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!** **- திரு. பால்ராஜ், கோயம்புத்தூர்.**

## பிள்ளைகளுக்கு இரங்கிய கர்த்தர்!



என் பெயர் முருகேசன். கடந்த நாட்களில் கோயம்புத்தூரில் நடைபெற்ற உங்கள் ஆசீர்வாதத்தின் நாள் கூட்டத்திற்கு வந்திருந்தேன். என் இரு பிள்ளைகளுக்காக ஜெபிக்கும்படி **Rev.Dr.A.ஜாஷ்வா** அவர்களிடம் சொன்னேன். பாஸ்டர் அவர்களும் என் பிள்ளைகளுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். **கர்த்தர் ஜெபத்தை கேட்டு என் மகளுக்கு கிருபையாய் இரங்கி நல்ல சுகத்தைக் கொடுத்து B.A. பாஸாக உதவி செய்தார். அதே போல வேலையில்லாமல் இருந்த என் மகனுக்கு Rs.17,000/- சம்பளத்தில் வேலை கிடைக்க கர்த்தர் தயை செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!**

**- திரு. முருகேசன், ஊட்டி.**

## அற்புத சுகத்தை அருளிய கர்த்தர்!



என் பெயர் ரோஸி. எனக்கு 69 வயதாகிறது. கண்ணாடி போட்டு தான் பைபிள் படிக்க முடியும். ஜெப நேரத்தில் **Rev.Dr.A. ஜாஷ்வா** அவர்கள் வியாதி உள்ளவர்கள் உங்கள் கைகளை வியாதி உள்ள இடத்தில் வைத்து ஜெபியுங்கள் என சொன்னார்கள். **எனக்கு கண் பார்வை மங்கலாக இருந்ததால் நான் என் கண்களில் கையை வைத்து ஜெபித்தேன். என் கண்களிலிருந்து ஒரு இருள் நீங்கியதை உணர்ந்தேன். இப்பொழுது கண்பார்வை தெளிவாக இருக்கிறது. கண்ணாடி இல்லாமலே சிறிய எழுத்துக்கள் உள்ள பைபிளை நன்றாக படிக்க முடிகிறது. அற்புத சுகத்தைக் கொடுத்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.**



**- Sis. ரோஸி, ஒண்டிபுதூர்.**

Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

திருநெல்வேலியில்
குடும்பங்களுக்கான ஆலோசனையும், தனி ஜெபமும்

ஜூலை 8 சனிக் கிழமை

இடம் : செல்வி மஹால்
காளிமார்க் பேருந்து நிறுத்தம் அருகில்
முருகன்குறிச்சி, பாளையங்கோட்டை
திருநெல்வேலி

நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை
மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரை

தூத்துக்குடியில்
அற்புதத்தின் மாலை கூட்டம்

இடம் : ராஜ் மஹால்
பழைய பேருந்து நிலையம் மற்றும்
ஹோட்டல் ராஜ் அருகில்
தூத்துக்குடி

ஜூலை 9 ஞாயிற்று கிழமை

நேரம் : மாலை 4.30 மணி முதல் 8.00 மணி வரை

ஜெபம் & ஆலோசனை : Dr. ஆனந்த ஸ்திரா

தொடர்புக்கு: 0431 2741926 & 94888 45627

திருச்சியில்
அற்புத சுகமளிக்கும் குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்



நேரம் :
காலை 9.30 மணி
முதல்
மதியம் 2.00 மணி
வரை

குடும்பமாய் வாருங்கள்!
ஆசீர்வாதமாய்
வாழுங்கள்!

ஜூலை 29 சனிக்கிழமை

தொடர்புக்கு
94888 45627
0431- 2741925

இடம் : அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம்,
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி – 18

தேவ செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா மற்றும் குடும்பத்தினர்

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,